செய்தி வெளியீடு எண். 05 நாள்: 02.01.2018

## வார்டு மறுவரையறை குறித்த ஆட்சேபனைகள் / கருத்துக்களை அரசியல் கட்சிகள் மற்றும் பொது மக்கள் 05.01.2018 தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளின் வார்டு மறுவரையறை அலுவலருக்கு (Delimitation Authority) அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் நேரடியாகவோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ எழுத்து மூலமாக தெரிவிக்கலாம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஊரகம் மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளான கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சி வரைவு வார்டுகள் மறுவரையறை கருத்துருக்கள் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் பொதுமக்களின் பார்வைக்கு 27.12.2017 முதல் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி வரைவு வார்டுகள் மறுவரையறை கருத்துருக்களில் ஆட்சேபனைகள், கருத்துக்கள் ஏதும் இருப்பின் அது குறித்தான விண்ணப்பங்கள் 02.01.2018-க்குள் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளின் வார்டு மறுவரையறை அலுவலருக்கு அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் நேரடியாகவோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ (Delimitation Authority) எழுத்து மூலமாக விண்ணப்பிக்க கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது.

மேற்படி கால அவகாசம் போதுமானதாக இல்லையென்று தெரிவித்து கூடுதல் கால அவகாசம் வழங்க கோரி அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகள் மறுவரையறை ஆணையத்தால் பரிசீலிக்கப்பட்டதை தொடர்ந்து வார்டு மறுவரையறை குறித்த ஆட்சேபனைகள் / கருத்துக்களை அரசியல் கட்சிகள் மற்றம் பொது மக்கள் 05.01.2018 அன்று மாலை 5.00 மணிக்குள் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளின் வார்டு மறுவரையறை அலுவலருக்கு (Delimitation Authority) அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் நேரடியாகவோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ எழுத்து மூலமாக தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**